


ியாளர்	சி.அரங்கராஜ்
	க.வேல்முருகன்
ாளர்	து.கனகராஜ்

Signature Not Verified
Signed by Assistant Director
Location Erode
Date:2025.04.25 12:13:14

Signature Not Verified
Signed by Village Panchayat President
Location Erode
Date:2026.01.28 21:39:32

நகர் ஊரமைப்புத்துறை (DTCP)
ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
பிச்சாண்டாம்பாளையம் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பிச்சாண்டாம்பாளையம் ஊராட்சி, புத்துார் புதுப்பாளையம் கிராமம், ரீ.ச.எண்: 153/2B - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண்: XMNQVP13 நாள்: 02.04.2025

அளவுகோல் : 1 : 200

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பளவு : 1.00 ஏக்கர் (அ) 4047.00 ச.மீ (பட்டாவின் படி)
கோரிய மனைகள் : 19
ஒதுக்கிய மனைகள் : 19
மனைப்பிரிவு எல்லை
நிலையிலுள்ள சாலை/அணுகுசாலை

பொது ஒதுக்கீடுகள்:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :-

i. மனைப்பிரிவின் சாலை பரப்பு : 1278.57 ச.மீ

ii. ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)X10%
= (4047.00 - 1278.57)X10%
= 276.84 ச.மீ

வழிகாட்டு மதிப்பு தொகை (TNCDRBR-2019 விதி 47(6) - ன் படி பூங்கா (OSR 10%) பரப்பு 276.84 ச.மீ - க்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பீடு தொகையான ரூ.44294.00/- னை உரிய அரசு கணக்குத் தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டது.

பொது உபயோகம்

(A). உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) X 0.5%
= (4047.00 - 1278.57) X 0.5%
= 13.84 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 14.06 ச.மீ (0.51%)

(B). TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) X 0.5%
= (4047.00 - 1278.57) X 0.5%
= 13.84 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 4.77 ச.மீ (0.53%)

மூலை முடக்கு :-
12.0மீ வரை அகல வரையிலான சாலைகளுக்கு 1.5மீ X 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

கட்டிட வரம்பு :-
9.0 மீ அகல வரையிலான சாலைகளுக்கு 1.50மீ -ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்

1. அரசாணை எண்-18 ந.நி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 (ம) அரசாணை எண்-16 ந.நி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020, அரசாணை எண்-181, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்-09.12.2020-ன் படி சாலை மற்றும் 0.5% பூமி உள்ளாட்சிக்கும்- 0.5% பூமி TANGEDCO க்கும் தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்:181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்-09.12.2020-ல் தெரிவுத்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்க்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கபட வேண்டும்
3. அரசாணை எண்:141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்-16-07-22-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்றும், பிச்சாண்டாம்பாளையம் ஊராட்சி தலைவர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்தாரரின் விண்ணப்தத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்தாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்பு மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் /விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகாசிக்கப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு உள்ளாட்சி பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்
10. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்
11. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
12. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுச்சுவர் (Compound Wall) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுச்சுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
13. மனை ஒப்புதல் RERA அனுமதி பெற்ற பின்னரே விற்பனை செய்யப்பட வேண்டும்.

SWP/DTCP/ERODE/LAYOUT NO: 134 / 2025

துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.